## இலங்கை மின்சார சபை - 2013

இலங்கை மின்சார சபை (சீஈபீ) மற்றும் இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மின்சார சபை அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மின்சார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சபை

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதியினது நிதிக்கூற்றுக்கள்

வரையறுத்த லங்கா கோல் கம்பனியினைத் தவிர்த்து சபையின் துணைக் கம்பனிகளினதும் கூட்டு முயற்சிகளினதும் கணக்காய்வாளர்கள் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியற்ற அபிப்பிராயத்தினை தெரிவித்திருந்தனர். துணைக் கம்பனிகளின் பெயர்களும் உரித்துடைமையும் பின்வருமாறு காணப்பட்டன.

| துணைக் கம்பனியின் பெயர் | உரித்துடைமை சதவீதமாக |
|---|---|
| வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி (எல்ஈசீஓ) | 55.2 |
| வரையறுத்த எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி | 63 |
| வரையறுத்த லங்கா கோல் (தனியார்) கம்பனி (எல்சீசீ) | 60 |
| வரையறுத்த இலங்கை எனர்ஜீஸ் (தனியார்) கம்பனி | 100 |
| வரையறுத்த திருகோணமலை மின்வலு கம்பனி (கூட்டுமுயற்சி) | 50 |

வரையறுத்த லங்கா கோல் கம்பனியின் கணக்காய்வாளர்கள் பின்வரும் அவதானிப்புக்களின் அடிப்படையில் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை தெரிவித்திருந்தனர்.

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முறையே ரூபா 1,789,698,174 மற்றும் ரூபா 1,792,294,204 தொகையான முற்செலுத்துகைகள் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் சரியான தன்மையினையும் உள்ள தன்மையினையும் மெய்மையாய்வு செய்வதற்காக நேரடி உறுதிப்படுத்தல்கள் என்ற வடிவில் ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏறத்தாழ ரூபா 100 மில்லியன் தொகையான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணங்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை மின்சார சபையின் நிதிக் கூற்றுக்கள்

#### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **எல்கேஏஎஸ் 2 – பதிவேட்டுப்பொருட்கள்:** நியமத்தின்படி, பதிவேட்டுப் பொருட்கள் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் அளவிடப்பட வேண்டியதுடன் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் முதல் வந்தது முதல் வெளியேற்றல் (எவ்ஐஎவ்ஓ) அல்லது நிறையளித்த சராசரிக் கிரய சமன்பாட்டைப் பயன்படுத்துதவதன் மூலம் நிச்சயிக்கப்படுதல் வேண்டும். ஆனால் நியமத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, சபையானது விநியோக பிராந்தியங்களில் அதனது பதிவேட்டுப்பொருள் மதிப்பீட்டிற்காக நியம விலைகள் முறையினை பயன்படுத்தியிருந்தது.

மேலும், இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பணிப்புக்களின் படி, விலைத் தளம்பலுக்கு உட்பட்ட பதிவேட்டுப்பொருட்களை பெறுமதியிடுவதற்காக நியமக் கிரயங்கள் அனுமதிக்கப்படலாம் ஏனைய நிலைமைகளில் பதிவேட்டுப்பொருட்களின் பெறுமதி கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் குறைந்ததில் பெறுமதியிடப்பட வேண்டும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வழமையான நிலமைகளின் படி, விலைகள் அதிகரித்துச் சென்றனவே தவிர தளம்பலுக்குட்பட்டிருக்கவில்லை. ஆகையால், அநேக சந்தர்ப்பங்களில் சபை அதனது நியம விலைகளை உள்ளபடியான விலைகளிலும் பார்க்க அதிகரித்துக் காட்டியிருந்தமை தெளிவாகின்றது. உதாரணமாக: 2013 இல் பொருளின் விலைகள் மற்றும் ஊழிய கூலிகளை மிகையாக மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டிருந்த தேறிய வருமானம் முறையே ரூபா 3,444 மில்லியன் (2012 - ரூபா 1,647 மில்லியன்) மற்றும் ரூபா 1,213 மில்லியன் (2012 - ரூபா 1,574 மில்லியன்) ஆக இருந்தது. அதற்கு மேல், விரிவான வருமானக் கூற்றில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட மேந்தலைகளாக ரூபா 1,568 மில்லியன் தொகையொன்று (2012 -

ரூபா 1,574 மில்லியன்) வேலைகள் கிரயத்திற்குச் சாட்டப்பட்டிருந்தது. (உள்ளபடியாக பயன்படுத்திய ஊழிய மணித்தியாலங்களிற்காக நியம வீதங்களை பிரயோகித்து கணிக்கப்பட்டது)

அதன் விளைவாக, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இருப்புக்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள், பேணுதல்கள் மற்றும் முடிவடைந்த வேலைகளின் பெறுமதிகள் நியாயமானவையாக வெளிக்காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களை விலை மதிப்பிடுவதற்காக சீரான கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்றல் வழிகள் மற்றும் சில விநியோக வழிகள் உள்ளபடியான கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்த அதேவேளை சேவை பிரதான இணைப்பு (எஸ்எம்சீ), முறைமை உருவாக்கல் (எஸ்வைஏ), ஈரான் நிதியளிப்புச் செயற்திட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொழில்கள், கமநெகும, பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு (டீசீபீ) போன்ற ஏனைய தொழில்கள் நியமக் கிரயத்தில் விலை மதிக்கப்பட்டிருந்தன.

(iii) நியமக் கிரயத்தில் இருப்புக்கள் விலை மதிக்கப்பட்டிருந்தமையால் 2010 முதல் 2013 வரையான ஆண்டின் செயற்பாட்டு விளைவுகளின் மீதான தாக்கம் பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | விலை முரணுடன் நிதிக்கூற்றுக்களின் படி செயற்பாட்டு விளைவு | மொத்தத் தேறிய நேர்மறையான விலை முரண் | விலை முரண் இன்றி நிதிக்கூற்றுக்களின் படி செயற்பாட்டு விளைவு | செயற்பாட்டு விளைவின் சதவீதமாக விலை முரண் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| 2013 | 12,846 | 5,466 | 7,380 | 43 |
| 2012 | (77,645) | 2,675 | (80,320) | 3 |
| 2011 | (19,266) | 4,494 | (23,760) | 23 |
| 2010 | 4,832 | 3,295 | 1,534 | 68 |

மேற்படி பகுப்பாய்வின் படி, இலாபம் அல்லது நட்டம் பெரியளவாக காணப்படுகையில், விலை முரண் காணமாக ஏற்பட்ட தாக்கம் சிறியதாகவும் எதிர்மறையாகவும் காணப்பட்டது.

(ஆ) **எஸ்எல்எவ்ஆர்எஸ் 5 – விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்துக்கள் மற்றும் நிறுத்தப்பட்ட செயற்பாடு -** :
எஸ்எல்எவ்ஆர்எஸ் 5 இல் விபரிக்கப்பட்டுள்ள பிரமாணங்களை சொத்துக்கள் பூரணப்படுத்துமாயின் விற்பனைக்காக உள்ளவையாக வகைப்படுத்தப்பட்டு முன்கொண்டு சென்ற தொகை அல்லது விற்பனைக்கான கிரயத்தினைக் கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்பட வேண்டுமென்பதுடன் நிதி நிலைமைக்கூற்றில் தனியாக சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். எவ்வாறாயினும், உற்பத்திப் பிரிவும் பரிமாற்றல் பிரிவும் இத் தேவைப்பாடுகளுடன் இணங்காதிருந்ததுடன் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டு ரூபா 24,565,471 தொகையான 60 வாகனங்களின் புத்தகப் பெறுமதி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் (பீபீஈ) கீழ் காண்பிக்கப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) **எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (பீபீஈ)**

(i) களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தில் பொருத்தப்பட்ட 115 மெகா வொட்ஸ் மின்சாரத்தினை உற்பத்திசெய்யும் இயலளவுடன் களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தில் பொருத்தப்பட்ட ஜீரீ 7 (எரி வாயு உளை) 1997 இல் தொழிற்படத் தொடங்கியது. 100,000 இற்குச் சமனான செயற்பாட்டு மணித்தியாலத்திற்குப் பின்னர் பொறியின் பிரதான திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் திருத்தத்திற்காக ஏற்பட்டிருந்த கிரயம் ரூபா 793,525,443 ஆகக் காணப்பட்டு அச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கருதப்பட்டிருந்தது. இருப்பினும், கொடுக்கல் வாங்கலின் தன்மையின் படி, இத் திருத்தச் செலவினம் மின்வலுப் பொறியின் எதிர்கால பொருளியல் நலனை அதிகரிப்பதற்கு உதவுகின்றமையால் இச் செலவினம் மூலதனச் செலவினமாக கருதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) சொத்துக்களின் பிரதான கூறினை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுதல் வேண்டும். இருப்பினும், சமனற்ற பயன்தரு பொருளாதார ஆயுளைக் கொண்ட ரூபா 46,083 மில்லியன் தொகையான வளவில் நுழைவு வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளையும் மின்வலு பொறிகள், நிலக்கறி உளைகள் போன்றவற்றையும் உள்ளடக்கியிருந்த 2011 இல் தொடங்கப்பட்ட

லக்விஜய மின்வலு நிலையம் தனியொரு சொத்தாக கருதப்பட்டு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

(iii) நிலையான சொத்துக்களில் உள்ளடங்கியிருந்த நிலக்கீழ் கேபிள் முறைமை (13Kv) 2012 ஆம் ஆண்டிலிருந்து 12 வருட பயன்தரு பொருளாதார ஆயுட்கால அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது. ஆனால், குறிப்பிடப்பட்டிருந்த கொள்கையின் படி, இச் சொத்துக்கள் மீது 35 வருட பயன்தரு பொருளாதார ஆயுட்கால அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்பட்டிருத்தல் வேண்டும். ஆகையால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களும் நிறுத்திவைத்த இலாபமும் முன்னைய ஆண்டு பெறுமானத்தேய்வின் மிகை ஏற்பாடு காரணமாக ரூபா 159,441,901 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(ஈ) **எல்கேஏஎஸ் 17 – குத்தகைகள்**

(i) குத்தகையாளர் நிதிக் குத்தகைகளை குத்தகை ஆதனத்தின் நியாயப் பெறுமதிக்குச் சமமான தொகைகளிலோ அல்லது குறைவாக இருப்பின், குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியிலோ சொத்துக்களாகவும் பொறுப்புக்களாகவும் அவற்றின் நிதி நிலைமை கூற்றில் அங்கீகரிக்க முடியும். இருப்பினும், 2013 ஆம் ஆண்டில் நிதிக் குத்தகையின் அடிப்படையில் பரிமாற்றல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட எட்டு வாகனங்களின் கிரயம் அந்த அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 7,087,215 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ii) அட்டுறு முறையில் அல்லது ஆண்டுக் கூட்டுத்தொகை முறையினைப் பயன்படுத்தி குத்தகை வட்டி வருமானக் கூற்றில் சாட்டுதல் செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும் பரிமாற்றல் பிரிவு குத்தகை வட்டியினை ஒவ்வொரு மாதமும் சமமான தொகையில் சாட்டுதல் செய்திருந்ததுடன் அதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த குத்தகை வட்டியும் தொங்கல் கணக்கிலுள்ள வட்டியும் ரூபா 6,198,720 ஆல் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iii) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொகைகளிற்கும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளிற்குமிடையே பின்வரும் அதிகரித்துக் கூறல்களும் குறைத்துக் கூறல்களும் அவதானிக்கப்பட்டன.

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் படி தொகை** | **கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி தொகை** | **அதிகரித்துக் கூறல்கள் / (குறைத்துக் கூறல்கள்)** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | 112,525,344 | 100,469,040 | 12,056,304 |
| தொங்கல் கணக்கிலுள்ள வட்டி | 48,605,344 | 29,349,065 | 19,256,279 |
| குத்தகை வட்டி | 12,151,336 | 16,327,235 | (4,175,899) |
| பெறுமதிசேர் வரி தொகை – ஏனைய செலவினம் | - | 3,014,076 | (3,014,076) |

(உ) **எல்கேஏஎஸ் 24 – தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்** : நியமத்தால் வேண்டப்பட்டவாறு தொடர்புடைய தரப்பினர்களுடனான உறவின் தன்மை அவ்வாறே கொடுக்கல்வாங்கல் குறித்த தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான தொடர்பின் எதிர்காலத் தாக்கங்களை புரிந்துகொள்வதற்குத் தேவையான நிலுவை மீதிகள் போன்றவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்களை சபை வெளிப்படுத்தியிருக்கவில்லை. சபையின் துணைக் கம்பனிகளுடன் மறைமுகமான உறவினைக் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் செயற்திட்ட (தனியார்) கம்பனிக்கு பின்வரும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தமை தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல்களாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) வவுனியா கிளிநொச்சி பரிமாற்றல் வழிச் செயற்திட்டம் - ஜேபீஐசீ நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம்.

(ii) பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்தல் பரிமாற்றல் வழிச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம்.

(iii) பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்தல் கிழக்கு மாகாணச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 1,345 மில்லியன் ஆகும்)

(iv) வட கிழக்கு வலு பரிமாற்றல் அபிவிருத்திச் செயற்திட்டம் - ஏடீபீ நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 425 மில்லியன் ஆகும்)

(v) உருவாக்கல் மின் உப நிலைய செயற்திட்டம் II ஆம் கட்டம் - ஏடீபீ நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம். (ஒப்பந்தத் தொகை ரூபா 1,815 மில்லியன் ஆகும்)

(vi) உருவாக்கல் மின் உப நிலைய செயற்திட்டம் I ஆம் கட்டம் - ஜீஓஎஸ்எல் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம்.

(vii) காலி மின் உபநிலையம், உருவாக்கல் மற்றும் புனரமைத்தல் செயற்திட்டம்

(viii) புதுப்பிக்கத்தக்க சக்திவளச் செயற்திட்ட உறிஞ்சலுக்கான மின் உபநிலைய உருவாக்கம் - சீதாவக, பலாங்கொடை, பதுளை, நுவரெலியா, உகுவல மின் உபநிலையங்களின் உருவாக்கம் மற்றும் மஹியங்கன புதிய மின் உப நிலையத்தினை நிர்மாணித்தல் (ஒப்பந்தத் தொகை ரூபா 2,336 மில்லியன் ஆகும்) (ஈசொட் விடயம்)

### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பரிமாற்றல் செயற்திட்டங்களில் அநேகமானவை வெளிநாட்டு உதவிகளின் உறுதுணையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களின் கிரயம் ஆண்டின் இறுதியில் செயற்திட்ட முகாமையாளரால் வழங்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்களைக் கருத்திற்கொள்ளாது வெளிநாட்டு வள திணைக்களத்தின் (ஈஆர்டீ) இணைய தளத்திலிருந்து பெறப்பட்ட தகல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நடைபெறும் வேலைகளும் உரிமை மூலதனமும் முறையே ரூபா 139 மில்லியன் மற்றும் ரூபா 111 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் முற்பண அறவீடும் பிடி காசும் முறையே ரூபா 13 மில்லியன் மற்றும் ரூபா 10 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தன.

(ஆ) விசேட நிகழ்வுகளிற்கு வெளிச்சம் வழங்கியமை தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்வலு மற்றும் சக்திவள அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா 10 மில்லியன் செலவு மீதியொன்றாக காணப்பட்ட போதிலும், தொடர்புடைய கோவையிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் கணக்காய்வில் கணிக்கப்பட்ட உள்ளபடியான பெறப்பட வேண்டிய தொகை ரூபா 14 மில்லியனாகும். ஆகையால்,

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் ரூபா 24 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபை 2012 திசெம்பர் 31 இல் நிலவிய சந்தைப் பெறுமதியை கழிவீடுசெய்ததன் மூலம் அதன் சில பிரிவுகளிற்குச் சொந்தமாக 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட மோட்டார் வாகனங்களின் நியாயப் பெறுமதிகளை கணிப்பீடு செய்திருந்தமையின் விளைவாக, விலை மதிப்பீட்டுச் சபை பரிந்துரைத்திருந்த சந்தைப் பெறுமதிகள் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனங்களின் மீதியும் கூட ரூபா 396 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) தனிப்பட்ட பிரிவுகளிற்கிடையே பரிமாற்றம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி சபையின் நிதிக்கூற்றுக்களில் பூச்சியமாக இருத்தல் வேண்டும். இருப்பினும் உள்ளே பரிமாற்றம் செய்யப்பட்டவைகள் மற்றும் வெளியே பரிமாற்றம் செய்யப்பட்டவைகளிற்கும் 2013 ஆம் ஆண்டில் ஏனைய பிரிவுகளிற்கு பரிமாற்றம் செய்யப்பட்ட நடைபெறும் வேலைகளிற்கும் (டபிள்யூஐபீ) இடையே ரூபா 1,920 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேற்படி குறைபாடுகள் காரணமாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அத்தொகையால் குறதைத்துக் கூறப்பட்டிருந்தன.

(உ) தனியார் மின்சாரக் கொள்வனவு (பீபீ) உடன்படிக்கை காலாவதியானமை காரணமாக வரையறுக்கப்பட்ட எக்ரிகோ பவர் (தனியார்) கம்பனியினால் நாட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருந்த மின்வலுப் பொறியின் இறக்குமதி செய்யப்பட்ட சில உபகரணங்கள் தொடர்பில் மீளளிக்கப்பட்ட ரூபா 94,294,181 இறக்குமதித் தீர்வைகள் மற்றும் வரிகளின் மீளளிப்பு ஏனைய செலவினமாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் மின்வலு கொள்வனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.
நாட்டிலிருந்து பொறியினை எடுத்துச் செல்கையில் அவ்வாறான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு ஐபீபீ உடன்படிக்கையில் எவ்வித ஏற்பாடும் காணப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன் முறையான அதிகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல்களை நிச்சயிக்கையில் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் அதன் விளைவாக சபையின் உண்மையான காசுப் பாய்ச்சல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | தொகை | தாக்கம் |
|---|---|---|
| | ரூபா | |
| மேந்தலை அறவீடுகள் (மதிப்பிடப்பட்ட தொகைகள் மூலதன மற்றும் பராமரித்தல் ஆகிய மின்சார வேலைகளின் பெறுமதியினை உள்ளடக்கியிருந்தது.) | 1,676,805,270 | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. இருப்பினும், கிரய அறவீட்டு வேலைகளுடன் தொடர்புடைய தொகை கிடைக்கப் பெறாமை காரணமாக உண்மையான தாக்கத்தினை நிச்சயிக்க முடியாதுள்ளது. |
| ஊழிய வீத முரண் | 1,213,515,708 | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 561,436,724 | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 75,626,084 | முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு குறைத்துக் கூறப்பட்டிருந்தது. |
| பெறவேண்டிய பதிவேட்டுப் பொருட்கள் | 4,979,012,034 | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு குறைத்துக் கூறப்பட்டிருந்தது. |
| களஞ்சிய விலை முரண் | 3,443,969,186 | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. |

(எ) 2013 யூலை மாதத்திற்குரிய எரிபொருள் பட்டியல்களின் தீர்ப்பனவில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 7,818,402 தொகையான வட்டி கணக்குகளிற்கு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ‘‘தேர்மல் கட்டிடத்தொகுதி’’ இன் எரிபொருள் பட்டியல்களின் தீர்ப்பனவில் ஏற்பட்ட தாமதத்தின் மீது செலுத்தவேண்டிய மறுக்கப்பட்ட வட்டியான ரூபா 749,973,435 தொகை

நிகழத்தக்க பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2013 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்தில் எல்ஈசீஓ இற்கான சீரான தேசிய வரி (யூஎன்ரீ) சீராக்கம் அல்லது மின்சார மொத்த வழங்கல் தொகையான ரூபா 68 மில்லியன் 2014 மார்ச் இல் இலங்கை பொதுப் பாவனைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், சபை இந்த யூஎன்ரீ சீராக்கத்தினை அதன் கணக்குகளிற்கு எடுக்காதிருந்ததுடன் அதன் விளைவாக, 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு இலாபமும் வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளும் இத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

**2.2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்ஈசீஓ இடமிருந்து பெறவேண்டிய தொகை எல்ஈசீஓ இன் நிதிக்கூற்றுக்களுடன் கணக்கிணக்கம் செய்யப்படாதிருந்ததுடன் இந்த இரண்டு நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 86 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) எல்ஈசீஓ இடமிருந்து வருமதிகாவுள்ள தொகை தொடர்பில் 2013 ஆம் ஆண்டிற்காக சபையால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்திற்கும் சபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தொகைக்கும், சபையின் நிதிக்கூற்றுக்களிற்கும் சபையால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்திற்கும் மற்றும் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டிற்கும் சபையின் நிதிக்கூற்றுக்களிற்கும் இடையே முறையே ரூபா 45 மில்லியன், ரூபா 68 மில்லியன் மற்றும் ரூபா 22 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) உள்ளகப் பிரிவுகளிற்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பின், எந்தவொரு நேரத்திலும் சபையின் நடைமுறைக் கணக்கில் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு எந்தவொரு கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகளும் காணப்படாதிருத்தல் வேண்டும். இருப்பினும், ரூபா 2 மில்லியன் உள்ளக நடைமுறைக் கணக்குகளிற்கிடையிலான கணக்கிணக்கம் செய்யப்படாத மீதியாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2.4 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுபையின் காற்றுச் சீராக்கல் பராமரித்தல் பிரிவுடன் தொடர்புடைய ரூபா 335,411,224 மொத்தக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 240,939,043 தொகை அல்லது 65 சதவீதமானவை 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக இருந்ததுடன் அம் மீதியை அறவிடுவதற்கு 2013 ஆம் ஆண்டிலேனும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையானது மீளாய்வாண்டு முழுவதும் சிறந்த திரவத் தன்மை நிலைமையினையும் பொருத்தமான தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தினையும் பேணுவதற்கு இயலுமான விதத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய காலப்பகுதி முடிவடைந்திருந்த ரூபா 4,095 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு சபை போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 21,395 மில்லியன் மொத்த வியாபார கடன்பட்டோர் மீதியுடன் ஒப்பிடுகையில் தனியார் துறையிடமிருந்து பெறவேண்டிய மீதி 86 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதிருந்த ஏனைய கடன்பட்டோர் மீதி ரூபா 2,280,752,812 ஆக காணப்பட்டது. மேலும், மின்வலு சக்திவள அமைச்சிடமிருந்தும் இலங்கை நிலைபேறான சக்திவள அதிகாரசபையிடமிருந்தும் நிலுவையாகக் காணப்பட்ட தொகைகள் முறையே ரூபா 6,142,277 மற்றும் ரூபா 897,025,999 ஆகக் காணப்பட்டன. இருப்பினும், இவை அவற்றினது கணக்கீட்டுப் பதிவேடுகளில் சபைக்குச் செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண அலுவலகத்திற்கு உரித்தான ரூபா 38 மில்லியன் பெறுமதியான 12 காணிகளிற்கான காணி உரித்து உறுதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 115,341 மில்லியன் பெறுமதியான 02 கடன்கள் தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேலும், திருப்பிச் செலுத்துதல் பட்டியல் மற்றும் அக்கடன்களிற்கான வட்டிகள் என்பன கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

(இ) கிராமிய மின்வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக மின்னுற்பத்தி, பரிமாற்ற மற்றும் விநியோக நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சபையால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவிகளிலும் மூலதன மானியங்களிலும் சிலவற்றை மாத்திரம் பொதுத் திறைசேரி மூலதனப் பங்களிப்பாக கருதியிருந்த போதிலும் அவை நீண்ட காலத்திற்காக பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமாக கருதப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படி, சபைக்கான மொத்தப் பங்களிப்பு ரூபா 96 பில்லியனாக இருந்த போதிலும், சபையின் நிதிக்கூற்றுக்களின் படி அது ரூபா 122 பில்லியனாக காணப்பட்டது. அதன்படி, அரசாங்க மானியமான ரூபா 26 பில்லியன் வேறுபாட்டிற்கு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுப் பரிகாரத்தை தேவையான அங்கீகாரங்கள் கிடைக்கப்பெறாமை காரணமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 2.2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு சபை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2013 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம்

(i) **47 (1) (ஆ) ஆம் பிரிவு** – சபையினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பாக சபை பொதுத் திறைசேரியுடன் ஆழ் நிதியமொன்றை தாபித்து பேணியிருக்க வேண்டும். கடன் மீட்டல் ஒதுக்கமொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது ஆனால் அது 2000 முதல் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 17,447 மில்லியனாகும்.

(ii) **47 (2) (அ) ஆம் பிரிவு** – சபையின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வினை மேவுவதற்காக சபை பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை தாபித்து பேணியிருக்க வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோரும் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் மீதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(iii) **47 (2) (ஆ) ஆம் பிரிவு** – சபையின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்குடனும் சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சபை பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை தாபித்து பேணுதல் வேண்டும். இருப்பினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக சபை அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 165.46 மில்லியனாகும்.

(இ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலுள்ள அதன் மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீதமான பங்களிப்பின் அடிப்படையில் காப்புறுதி எஸ்கரோ நிதியத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,250 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சபை முதலீடு செய்திருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணங்கள் 389 மற்றும் 260 இன் படி, ஆளடையாளத்தை மெய்மையாய்வு செய்ததன் பின்னர் காசோலைகள் நபருக்கு அல்லது அவரது பிரதிநிதிக்கு கையளிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 19,813,345 பெறுமதியான 452 காசோலைகள் குறித்த நிதிப்பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் ஆட்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட சீஈபீ இனதும் தொகுதியினதும் நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகள் முறையே ரூபா 18,636 மில்லியன் மற்றும் ரூபா 21,500 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு முந்திய முன்னைய ஆண்டின் நேரொத்த முறையே ரூபா 61,447 மில்லியன் மற்றும் ரூபா 54,607 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் முறையே ரூபா 80,083 மில்லியன் மற்றும் ரூபா 76,107 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் படி, 2013 ஆம் ஆண்டில் நீர்மின்சார உற்பத்தியானது நீரேந்துப் பகுதிகளில் காணப்பட்ட அதிகளவான நீர் மட்டம் காரணமாக 2012 இல் உற்பத்தி செய்யப்பட்ட 3,292 ஜீடபிள்யூஎச் உடன் ஒப்பிடுகையில் 3,634 ஜீடபிள்யூஎச் இனால் அல்லது 10 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எரிபொருள் செலவினம் மற்றும் சுதந்திர மின்சார உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான செலவினம் என்பன 2013 ஆம் ஆண்டில் முறையே ரூபா 12,869 மில்லியன் மற்றும் ரூபா 47,228 மில்லியனால் குறைவடைந்திருந்தமை ஆகியன சபையின் நிதிவிளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தன.

| | மின்சார உற்பத்தி | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | அதிகரிப்பு (குறைவு) | |
| **மூலம்** | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **%** |
| நீர்மின் | 6,926 | 3,292 | 3,634 | 110 |
| அனல்மின் | 4,773 | 8,339 | (3,566) | (42) |
| மாற்றீடு செய்யப்படாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 263 | 171 | 92 | 53 |
| **மொத்தம்** | **11,962** | **11,802** | **160** | **1.3** |

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் முடிவிலுள்ளவாறான நிதி நிலைமையின் முக்கிய விடயங்களை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| விடயம் | தற்போதைய ஆண்டு | முன்னைய ஆண்டு (மீளமைக்கப்பட்டது) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 681,014 | 627,695 | 8 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 104,703 | 107,437 | (2) |
| மொத்தச் சொத்துக்கள் | 785,717 | 735,132 | 7 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 92,872 | 137,357 | (32) |
| **தொழிற்படு மூலதனம்** | **11,831** | **(29,920)** | **140** |
| ஈடுபடுத்திய மொத்த மூலதனம் | 692,845 | 597,775 | 16 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 480,076 | 406,385 | 18 |
| **உரிமைத்துவம்** | **212,769** | **191,390** | **11** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 7 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், தேறிய நடைமுறைச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 30 பில்லியன் எதிர்மறைப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2013 இல் ரூபா 12 பில்லியன் சாதகமான தொகையாக மாற்றமடைந்து 140 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவம் செய்தது. இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணம் சீபீசீ இற்கும் சுதந்திர மின் வழங்குனர்களிற்கும் செலுத்தவேண்டிய தொகைகளான முறையே ரூபா 43,702 மில்லியன் மற்றும் ரூபா 78,356 மில்லியன் தொகைகள் 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டமையாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ரூபா 785 பில்லியன் தொகையான ஈடுபடுத்திய மொத்த மூலதனத்தில் நாற்பத்தியெட்டு சதவீதம் கடன்களினூடாகப் பெறப்பட்ட நிதிகளால் நிதியிடப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டின் கடன் பங்கு 68 சதவீதமாகும்.

மேற்படி பகுப்பாய்வின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் சபை அதன் திரவத்தன்மை நிலைமையில் ஓரளவு முன்னேற்றதினை வெளிக்காட்டியது.

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.3.1 நேர்க் கிரய பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான சபையின் நேர்க் கிரயத்தின் பொழிப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **மொத்த நேர்க் கிரயத்தின் சதவீதமாக செலவினம்** | **ரூபா மில்லியன்** | **மொத்த நேர்க் கிரயத்தின் சதவீதமாக செலவினம்** |
| எரிபொருள் | 29,425 | 18 | 42,515 | 19 |
| மின்வலு கொள்வனவு | 80,308 | 48 | 120,264 | 54 |
| நிலக்கரி | 10,677 | 6 | 11,099 | 5 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 26,196 | 16 | 27,530 | 13 |
| பெறுமானத்தேய்வு | 20,319 | 12 | 21,011 | 9 |
| **மொத்தம்** | **166,925** | **100** | **222,419** | **100** |

மேற்படி தகவல்களின் படி, 2013 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான மொத்தக் கிரயத்தில் முறையே 72 சதவீதம் மற்றும் 78 சதவீதம் ஆனவை மின்வலு கொள்வனவு மற்றும் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமை வெளிப்பட்டது.

(ஆ) நீர் மின் உற்பத்தி போதியளவில் காணப்பட்ட போதிலும், மின் கொள்வனவு உடன்படிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட நிலையான கிரயத்தினை மேற்கொள்தல் தவிர்க்கமுடியாததாக இருந்தமையின் விளைவாக, பொது மக்களுக்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குதல் என்ற சபையின் மிக முக்கியமான குறிக்கோளை மீளர்ய்வாண்டிலும் அடைய முடியாது போயிருந்தது. இருப்பினும், 2012 ஆம் ஆண்டில் அலகொன்றிற்கான சராசரிக் கிரயம் ரூபா 23.66 ஆகக் காணப்பட்டதுடன் அலகொன்று ரூபா 15.56 இற்கு விற்பனை செய்யப்பட்ட அதேவேளை 2013 இல் அலகுக் கிரயம் ரூபா 17.70 ஆகக் குறைவடைந்து அலகொன்று ரூபா 17.93 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 3.3.2 அலகு விலை பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு அலகு மின்சார விற்பனையிலிருந்தான சராசரி (நட்டம்)/இலாபத்தினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி விற்பனை விலை | கேடபிள்யூஎச் ஒன்றிற்கான சராசரி கிரயம் | அலகொன்றிற்கான இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|
| 2013 | 17.93 | 17.70 | 2.22 |
| 2012 | 15.56 | 23.66 | (5.84) |
| 2011 | 13.22 | 15.59 | (2.37) |
| 2010 | 13.16 | 13.02 | 0.14 |
| 2009 | 13.13 | 14.71 | (1.58) |

மேற்படி அட்டவணையின் படி, ஒரு அலகுக்கான அதிகூடிய இலாபம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடப்பாண்டில் பதிவுசெய்யப்பட்டது.

### 3.4 முறையற்ற கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 திசெம்பர் 13 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாது சபை அதனது ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை தனது சொந்த நிதிகளிலிருந்து செலுத்தியிருந்தது. மேற்குறிப்பிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தைப் புறக்கணித்து சபையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 1,312 மில்லியனாகும்.

இது தொடர்பில் சபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.
***அதனது ஊழியர்கள் சார்பாக சபையால் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை செலுத்துதல் மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் ஆலோசனையுடன் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் தொழிற் சங்கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் கூட்டிணைப்பினால் சட்டமாக்கப்பட்டுள்ளது.***

(ஆ) 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது முப்பத்தி ஒன்பது வேறுபட்ட பதவியணியினருக்கான படிகள் அவ்வப்போது சபையால் அதன் பதவியினர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறான படிகளாக 2013 ஆம் ஆண்டில் ரூபா 642 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது.

(இ) வெளிவாரி கடன்வழங்கும் முகவர் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கடன்களிற்காக ஊழியர்களிற்கு 2/3 வட்டியினை மீளளித்தல் தொடர்பில் கீழே காட்டப்பட்ட பொதுவான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. விநியோகப் பிரிவுகள் நீங்கலாக 2013 இல் அவ்வாறு மீள்நிரப்பல் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 1,166 மில்லியனாக காணப்பட்டது.

- உரித்துடைய எல்லையினை மிகைத்து ஊழியர்களிற்கு கடன் தொகைகள் வழங்கப்பட்டிருந்தமை.
- நிலையான வைப்புக்கள், தனிப்பட்ட பிணைகள் போன்ற ஆதனங்களை ஈடாக வைத்து எடுக்கப்பட்டிருந்த தனிப்பட்ட கடன்களிற்கான வட்டிகளும் மீள்நிரப்பப்பட்டிருந்தமை.
- வாழ்க்கைத் துணையல்லாத வேறு தரப்பினர்களுடன் கூட்டுச்சேர்ந்து உத்தியோகத்தர்களினால் கடன்கள் எடுக்கப்பட்டிருந்தமை.
- நிதி நிறுவனங்களிற்கு முறையற்ற கடிதங்களை சமர்ப்பித்திருந்தமை
- ஏனைய கடன்களை தீர்ப்பதற்காக கடன்கள் எடுக்கப்பட்டிருந்தமை
- பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுடன் தொடர்புடைய ஆதனங்கள் உத்தியோகத்தரினதோ அல்லது வாழ்க்கைத் துணையினதோ பெயரில் காணப்படாதிருந்தமை.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தளம் அனல் மின் நிலையம் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாட்டுத் தடைகள் காரணமாக ரூபா 25,098 மில்லியன் கிரயம் கொண்ட 1394.33 மெகா வொட் (MWh) மின்சார மணித்தியால நட்டமொன்றை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 104(1) இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நட்டத்தை ஏற்படுத்தும் விபத்தொன்று இடம்பெறுமாயின் நட்டங்கள் இடம்பெறுவதற்கு வழிவகுத்த காரணங்களை மதிப்பிடுவதற்காகவும் தொடர்புடைய தரப்பினர்களிற்கு பொறுப்புக்களை சுமத்துவதற்காகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நட்டங்கள்

தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும். இருப்பினும், 2013 யூன் 08 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து காரணமாக குகுலேகங்கை மின்சார நிலையத்திற்கேட்பட்ட நட்டம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பாய்வு செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் புத்தளம் அனல் மின் நிலையத்தில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாட்டுத் தடைகள் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 25,098 மில்லியன் கிரயம் கொண்ட 1394.33 மெகா வொட் (MWh) நட்டமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் காரணமாக 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த 35 அறிவிக்கப்பட்டிருந்த மோசடிகளின் பெறுமதி ரூபா 49 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்தது.

(ஈ) சபையின் தலைமை அலுவலகத்திற்காக ''விதுலக்பாய'' எனப் பெயர்சூட்டப்பட்டு பிரேரிக்கப்பட்டிருந்த கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மாணத்தின் பிரகாரம் உடனடியாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த நிர்மாண இடைநிறுத்தலுக்கான காரணம்/கள் சபை தீர்மானத்தில் உள்ளடங்கியிருக்காததுடன் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவுமில்லை. இடைநிறுத்தப்படும் திகதி வரை ஏற்பட்டிருந்த நிர்மாண மற்றும் உசாத்துணை கிரயங்கள் ரூபா 244.15 மில்லியனாக காணப்பட்டது.

**3.6 சர்ச்சசைக்குரிய விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளடங்கலாக அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் நிதி மற்றும் நிருவாகம் தொடர்பாக ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பேணுவதற்காக காலத்திற்குக்காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்கள் என்பவற்றை இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை இலங்கை மின்சாரசபைக்கான நிருவாக ஒழுங்கு விதிகளாக கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படாதிருப்பின் அவை பிரயோகிக்கப்படுவதில்லை என்ற நிலையை 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்ததப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க சபை பேணியிருந்ததென்பது

கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 1990 மார்ச் 09 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக பத்திரிகை விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்றன ஊடாக தகைமைகொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து நாடுதளுவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோராது எழுதுவினைஞர்கள், காசாளர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற திறன்கள் அற்ற மற்றும் பகுதியளவில் திறன்கள் கொண்ட பதவியினரை சபை வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. அதன் விளைவாக மிகப் பொருத்தமான நபர்களை தொடர்புடைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை சபை இழந்திருந்தது.

(ii) சபையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ரூபா 1,000 தற்காலிக மாதாந்தப் படி தொடர்பில் முன்னைய ஆண்டுகளிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயம் மீளாய்வாண்டிலேனும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீத வட்டியில் கடன்களை வழங்கியிருந்தது.

(ஆ) தரப்பட்ட தகவல்களின்படி, இலங்கை மின்சார சபையின் நிதி முகாமையாளருக்கு முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்படாதிருந்த போதிலும், 1990 ஆம் ஆண்டிலிருந்து அதாவது நிதியம் கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து காப்புறுதி ஒதுக்கத்தின் முதலீடு தொடர்பாக அவர் தீர்மானம் எடுத்திருந்தார். வேண்டப்பட்ட அங்கீகாரமின்றி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 5,250 மில்லியனாகும்.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி ஒதுக்க நிதிய மீதி மற்றும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு என்பவற்றுக்கிடையில் ரூபா 4,374 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் சபையின் சுய

காப்புறுதிக் கொள்கையின் படி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை அமுலாக்குவதற்கு சபையில் பொருத்தமான நிதி முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) லெகோ மின்சாரக் கம்பனிக்கு பல ஆண்டுகளாக சபை மின்சாரத்தை விற்பனை செய்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்துமிருந்த போதிலும், அந்த இரு தரப்பினர்களுடன் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆண்டிற்கான எனது அறிக்கையின் மூலம் சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பில் 2013 ஆம் ஆண்டிலேனும் எவ்வித நடவடிக்கைகளும் எடுகக்ப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ஒத்த பகுதியைக் கொண்டு முன்பக்க மூடி பதிலீடு செய்யப்பட்டது. (24 வாகனங்கள்)
- உள்நாட்டில் பாவிக்கப்பட்ட ஏ 2ரீ பாரந்தூக்கி பொருத்தப்பட்டது (2 வாகனங்கள்)
- பாவிக்கப்பட்ட மூடியைக் கொண்டு அசல் மூடி பதிலீடு செய்யப்பட்டது. (2 வாகனங்கள்)
- பயன்படுத்தப்பட்ட வேறுபட்ட ரக மூடி மற்றும் தட்டினைக் கொண்டு அசல் முன்பக்க மூடி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- பயன்படுத்தப்பட்ட பகுதிகளைக் கொண்டு முன்பக்க மூடி மற்றும் பின்பக்கத் தட்டு பதிலீடு செய்யப்பட்டது. (1 வாகனம்)
- உள்நாட்டில் ஒரு பாரந்தூக்கி பொருத்தப்பட்டது (1 வாகனம்)

(ஊ) அளவிடக்கூடிய (சகல நிர்வாகக் கிரயங்கள், நிலையான செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கட்டணங்கள், மற்றும் தொடர்புடைய செலவினங்களை உள்ளடக்கிய) மற்றும் அளவிட முடியாத (கம்பனியின் கடன் சேவைக் கடப்பாடுகள்) என்ற இரண்டு உப கூறுகளைக் கொண்ட இயலளவுக் கட்டணங்கள் சுதந்திர மின்வலு உற்பத்தியாளர்களுக்கு (ஐபீபீஎஸ்) 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தன. அளவிடப்பட முடியாத கூறினை (கடன் மீள்நிரப்பல்) மீளளிக்கப்படுவதற்கான காலம் காலாவதியாகியிருந்த போதிலும், சபை அக்கூறினை மீளளிப்புச் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2013 இல் அவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த தொகை யூஎஸ்டொலர் 27 மில்லியன் மற்றும் யப்பானிய யென் 183 மில்லியனாகும் (2012 இல் யூஎஸ்டொலர் 15 மில்லியன் ஆகும்). ஐபீபீஎஸ்

மிகையாக மீள்நிரப்பல் செய்யப்பட்ட மொத்தத் தொகை கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

இது தொடர்பில் சபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

***மின்வலு கொள்லவனவு உடன்படிக்கையின் வரி/நிதிசார் பக்கங்களில் குறிப்பிடப்பட்டவாறு உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் மற்றும் காப்புறுதி போன்ற கூறுகள் காலப்பகுதியின் இறுதி வரை தொடர்ந்திருந்தமை காரணமாக கடன் சேவைக் காலம் முடிவடைந்த பின்னர் அளவிட முடியாத கூறு பூச்சயமாக மாட்டாது என்பதனைக் கருத்திற்கொள்தல் வேண்டும்.***

(எ) ஐபீஎஸ் களிற்கு உரித்தான மின்வலுப் பொறியின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் இயலளவுக் கட்டண அளவிடக்கூடிய கிரயக் கூறில் உள்ளடங்கியிருந்ததுடன் அக்கிரயங்கள் ஏற்பட்டதா அல்லது இல்லையா என்பதனைக் கருத்திற்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தன. மேலும், அப் பேணுகைக்கான பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் இறக்குமதியுடன் தொடர்புடைய வரிகள் சபையால் தனியாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அச்செலவினங்களை மீளளிப்பதற்கு வரையறையொன்று காணப்படவில்லை.

மேலும், சில ஐபீஎஸ் ஏனைய சில ஐபீஎஸ் களின் பேணுகை ஒப்பந்தங்களை பொறுப்பேற்றிருந்ததுடன் ஐபீஎஸ் களிற்கிடையே தொடர்புடைய தரப்பு மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் காணப்பட்டன. அதன் காரணமாக மின்வலுப் பொறிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினது உள்ளபடியான பயன்படுத்தலை மெய்மையாய்வு செய்யாது வரிகள் அடங்கலான செலவின மீளளிப்பின் புத்திசாதுரியத் தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. 2013 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு மீளளிக்கப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா 670 மில்லியனாக காணப்பட்டது.

இது தொடர்பில் சபையின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

***மின்வலுப் பொறியின் நிலையான இயக்க மற்றும் பராமரித்தல் கிரயங்கள் பீஏ இன் பிரகாரம் இனங்கப்பட்ட வரியின் மீது இயலளவுக் கட்டணத்தின் அளவிடக்கூடிய கூறின் ஊடாக ஐபீபீ இற்கு விடுவிக்கப்படுகின்றன. அவற்றின் மீது ஏற்பட்ட உள்ளபடியான கிரயங்களின் அடிப்படையில் மேற்படி கொடுப்பனவை பீஏ இற்குச் செலுத்துவதற்கு எவ்வித சாத்தியமும் காணப்படவில்லை.***

***பீபீஏ இன் படி, மின்வலு பொறியின் பராமரித்தல் வேலைகளிற்காக கம்பனியினால் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களுடன் தொடர்புடைய வரிகளை சீஈபீ மீளளித்தல் வேண்டும். இருப்பினும், வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் மின்வலுப் பொறியின் அவசர திருத்தத் தேவைகள் போன்ற நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக பராமரித்தல் வேலைகளை பௌதீகரீதியில் கண்காணிப்பதற்கும் சீஈபீ இன் பதவியினரால் மின்வலுப் பொறியில் பயன்படுத்தப்பட்ட பொருட்களை மெய்மையாய்வு செய்வதற்கும் தற்போது அவ்வாறான பொறிமுறையொன்று நடைமுறையில் இல்லை. எவ்வாறாயினும், கால அடிப்படையில் மின்வலுப் பொறியில் பயன்படுத்தப்பட்ட இறக்குமதிப் பொருட்களின் உள்ளபடியான பயன்பாட்டினை மெய்மையாய்வு செய்வதற்கு சீஈபீ இனால் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.***

(ஏ) செயற்திட்ட உடன்படிக்கையிலோ, நிதி உடன்படிக்கையிலோ அல்லது செயற்திட்ட நிர்வாக புரிந்துணர்வுகளிலோ அவ்வாறான ஏற்பாடுகள் காணப்படாத போதிலும், வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்களின் நான்கு ஒப்பந்தகாரர்கள் செயற்திட்டம் சார்பில் செயற்திட்ட நிதிகளிலிருந்து ரூபா 388,018,653 செலவில் 57 வாகனங்களைக் கொள்வனவு செய்திருந்தனர். மேலும், அந்த சகல 57 வாகனங்களும் ஒப்பந்தகாரர்களின் பெயர்களில் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் பொருத்தமற்ற முறையில் செயற்திட்டத்தின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 17 வாகனங்கள் 2013 இல் சீஈபீ இற்கு கையளிக்கப்பட்டிருந்தன ஆனால் சபையின் நிதிக்கூற்றுக்களில் எவ்வித சீராக்கல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனியில், கூட்டு முயற்சி கம்பனியொன்றில் 50 சதவீத உரிமைத்துவம் சீஈபீ இற்கு காணப்பட்ட போதிலும், மூன்று பணிப்பாளர் பதவிகளில் ஒரு பதவி மாத்திரம் அதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகையால், ஏனைய பங்காளர்களிற்குச் சாதகமாக தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது.

### 3.7 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 இல் விநியோகிக்கப்பட்ட ஒட்டோ டீசலின் அசாதாரண குறைவுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து சபை கோரிக்கையினை மேற்கொள்ளாதிருந்ததுடன் குறைவாக வழங்கப்பட்டவற்றின் பெறுமதி ரூபா 291,445,480 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் படி சகல பொது முயற்சிகளும் எல்லாப் பிரதான செயற்பாடுகளையும் உள்ளடக்கி தமக்கென உரித்தான முறைமைகள்/கையேடுகளை வைத்திருப்பதுடன் காலத்திற்கேற்ப திருத்தப்பட்டு நாளதுவைரயாக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 1987 அளவில் தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டல் கையேடுகளை சபை திருத்தி நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நிலவிய பாரிய நிதி நெருக்கடியை கருத்திற்கொள்ளாது எவ்வித வரையறையுமின்றி பதவியணியினருக்கு கடன்களை சபை வழங்கியிருந்தது. விநியொகப் பிரிவுகளின் ஊழியர்களைத் தவிர்த்து சபையின் 3,492 ஊழியர்களிற்காக 2013 ஆம் ஆண்டில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த பதவியினர் கடன்களின் மொத்தம் ரூபா 516 மில்லியனாகும்.

(ஈ) மோட்டார் சைக்கிள் கடன்கள் அல்லாத ரூபா 102 மில்லியன் வாகனக் கடன்கள் சபையின் 226 ஊழியர்களிற்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- கடன்கள் தொடர்பில் ஆவணங்களைச் சமர்ப்பித்திருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையின் விளைவாக குறித்த நோக்கத்திற்காக கடன் தொகை பயன்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்த முடியவில்லை.
- அநேக சந்தர்ப்பங்களில் கடனின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் சபையில் ஈடாக வைக்கப்பட்டிருக்கவில்லை.
- உயர் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களால் (முகாமையாளர்கள்) எடுக்கப்பட்ட கடன்களிற்கு கீழ் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் (உதவியாளர்கள்) உத்தரவாதம் வழங்கியிருந்தனர்.
- கடன் பெறுனரினதும் பிணைதாரரினதும் நாற்பது சதவீத அல்லது அறுபது சதவீத சம்பள எல்லை தகுதி விதியினைக் கருத்திற்கொள்ளாது கடன்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
- தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

- தகுதியுடைய எல்லைக்கும் மேலாக கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- முன்னர் வழங்கப்பட்ட கடனிற்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாக முன்னரே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- முன்னர் பெறப்பட்ட கடனில் நிலுவையாக உள்ள மீதிகள் முழுமையாகச் தீர்க்கப்படாமலேயே புதிய கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.
- பூரணத்துவமற்ற கடன் உடன்படிக்கைகள் அவதானிக்கப்பட்டன.
- சுங்கத் தீர்வை சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கடனொன்றுடன் தொடர்புடைய காசோலை சபை பொது முகாமையாளரின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் பெறுபவரால் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வங்கியின் பெயரிலல்லாது சபையிடமிருந்து கடனைப் பெறும் உத்தியோகத்தரின் பெருக்கு எழுதப்பட்டிருந்தது.
- குறிப்பிட்ட பிரிவுகளால் வழங்கப்பட்ட கடன்கள் தீர்ப்பனவு செய்யப்படும் வரைக்கும் தொடர்ச்சியான அடிப்படையில் வருடாந்த வருமான உத்தரவுப் பத்திரங்கள் மற்றும் பூரணமான காப்புறுதிச் சான்றுகளின் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு செவ்வை பார்க்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தினை மிகைத்து 1517 ஊழியர்கள் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளியிலிருந்து பெறப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 4,459 ஆக இருந்ததுடன் அது சபையின் மொத்த பதவியினர் பலத்தில் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பிலுள்ள பின்வரும் பிரதான பதவிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்தன.

| **வகை** | **வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|

| | |
|---|---|
| நிறைவேற்றுனர் | 174 |
| மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவை | 22 |
| திறன் தொழில்நுட்பச் சேவை | 640 |
| அரை- திறன் தொழில்நுட்பச் சேவை | 1,616 |
| ஏனைய திறன்கள் பதவியணி | 34 |
| **மொத்தம்** | **2,486** |

(ஈ) திறன்களற்ற வெளிக்களச் சேவைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,717 ஆல் மிகைத்துக் காணப்பட்டது.

(உ) பதவியுர்வுக்காக சிரேஷ்ட அடிப்படையினை மாத்திரம் கருத்திற்கொள்வதனைத் தவிர வெற்றிகரமான திட்டமொன்று காணப்படவில்லை. ஆகையால் பதவியுயர்த்தப்படுவதனால் ஊழியர்கள் நன்மை அடைந்தனரேயன்றி நிறுவனமல்ல. சபை வழமையாக பிரதான பதிவிகளுக்கு அரையாண்டிலும் பார்க்க குறைவான காலத்திற்கே பதவியுயர்வுகளை வழங்கியிருந்தது.

அத்துடன், பொருத்தமான இடமாற்றக் கொள்கையொன்று அல்லது நடைமுறையொன்று சபையில் காணப்படவில்லை. உதாரணமாக கொலன்னாவ காற்றுச் சீராகக்ல் பராமரித்தல் பிரிவிலுள்ள ஊழியர்களில் 52 சதவீதத்தினர் 15 முதல் 37 ஆண்டுகளாக ஒரே இடத்தில் வேலையாற்றி வருகின்றனர்.

(ஊ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவி பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) ஆகும். ஆனால், விசேடமாக மின்னியல் பொறியியலாளர் போன்ற ஏனைய சேவையிலுள்ளோருக்கும் இப் பதவியினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் தேவையான மனித வளத் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டம் முழுமையானதும் சரியானதுமானதும் எனக் கருதப்பட முடியவில்லை.

(எ) சபையில் ஆளணி முகாமைத்துவப் பிரிவிலுள்ள பிரதான பொறியியலாளர் என்ற பதவி (மனிதவள கொள்கை) தனித்தனியான இரண்டு உயர்திறன்தொழிலாளர் களுக்கிடையே பொருந்தாமை வெளிப்பாட்டைக் காட்டும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

(ஏ) தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி, மனித வள உத்தியோகத்தர் சேவையின் மொத்தப் பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அதனை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்,

சபையின் சரித்திரத்தில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுகளின் தொழிற்பாடுகளிற்கு நீண்ட காலமாக தலைமைதாங்கி செயற்பட்டு வருவதனால் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று இருப்பது அவதானிக்கப்படாததுடன் அப்பிரிவிலுள்ள 4 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட பதவிகள் மனித வளத் துறையிலல்லாத ஏனைய சேவைகளிற்கு திறந்து விடப்பட்டிருந்தது.

மனித வள முகாமையாளர் மற்றும் மனித வள உத்தியோகத்தர் போன்ற பதவிகளிற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனுபவம் 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ள போதிலும் இந்த நிறுவனத்தில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

## 3.9 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(இ) பதிவேட்டுப் பொருட்கள் கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்
(ஊ) முதலீடுகள் மற்றும் துணைக் கம்பனிகள் மீதான கட்டுப்பாடு
(எ) நடைபெறும் வேலை
(ஏ) செயற்திட்ட முகாமைத்துவம்
(ஐ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஒ) பதவியினர் கடன்கள்
(ஓ) விற்பனைகள்